அறிய விரும்புகிறேன். மேலும் 4 பேர் சஸ்பெண்ட் செய்யப் பட்டிருக்கிறார்கள். ஆறுமாத காலம் ஆகிவிட்டது, இன்னும் அவர்களை வேலையில் எடுத்துக்கொள்ளவில்லை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் தொழிலாளர்கள் ஹோசூர் கால்நடைப் பண்ணையைச் சேர்ந்தவர்களா?

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, அவர்கள் புதுக் கோட்டைப் பண்ணையைச் சேர்ந்தவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஹோசூர் கால்நடைப் பண்ணையைப் பற்றிய கேள்வியைத்தான் போட வேண்டும்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, ஹோசூர் கால்நடைப் பண்ணையில் காணாமல் போன கோழிகள் 5,000 என்றும் அதன் மதிப்பு ரூ. 900 என்றும் சொல்லப்படுகிறதே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோழிப் பண்ணை பற்றிய கேள்விக்கு பதில் அமைச்சரவர்களிடம் இருக்காது.

திரு. மு. அம்பிகாபதி: சபாநாயகர் அவர்களே, அந்த கால் நடைப் பண்ணையில் ஆடுகள் 1977 ஆம் ஆண்டுக்கு முன்பு காணாமல் போனதாகச் சொல்லப்படுகிறதே. ஆகவே இப்போது அதுபோல் ஏதாவது நடக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவரவர் களே, அப்படி நடந்ததாகக் குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றியங்களில் குழந்தைகள் கண்காட்சி.

*வினா எண் 60.—**திரு. பெ. சு. திருவேங்கடம்**: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) ஒன்றியங்களில் மகளிர்-மழலை நலத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் குழந்தைகள் கண்காட்சிகள் நடத்தப் பெற்று வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாவை ?

[1978 செப்டம்பர் 2

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) ஆம்.

(ஆ) ஒரு கண்காட்சிக்கு ரூ. 40 வீதம் 5 குழந்தைகள் கண் காட்சிக்கு ரூ. 200 செலவில், எல்லா வட்டாரங்களிலும் இக் கண்காட்சி களப் பணியாளர்கள், ஊர்நலப் பணியாளர்கள், விரிவாக்கப் பணியாளர்கள் (சமூக நலம்) ஆகியோர் உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, ஒரு கண்காட்சிக்கு செலவு ரூபாய் 40 என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். கண்காட்சி நடத்துகின்றபோது ஒரு ஆண்டு குழந்தைகளுக்கென்றும் இரண்டு ஆண்டு குழந்தைகளுக் கென்றும் விதங்களில் நடத்தப்படுகின்றன. அப்படி நடத்தப் படுகின்ற போது இந்த 40 ரூபாய் என்பது மிகவும் குறைவான தொகையாக இருக்கின்றது. ஆகவே இதனை அதிகமாக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவரவர் களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்களிடம் இது குறித்து கேட்பதே நலம் என்று கருதுகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, நிதியமைச்சரவர்களும் இருக்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் இது நடைமுறையிலே மிகவும் சிரமமானதொரு பணியாகும். இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு 3 ரூபாய் 4 ரூபாய் தான் சன்மானம் கொடுக்கப்படுகிறது. ஆகவே இந்தத் தொகையினை அதிகமாக்குவதில் சிரமம் ஒன்றும் இருக்காது. ஆகவே இதனை அதிகமாக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, அது பற்றிய விவரங்களை எல்லாம் தெரிவித்தால் நடவடிக்கை எடுப்பதற்குச் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)